**ஜூன் – 17**

**"அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலை நிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும்,.... அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருக்கிறார்." - மல் 3 : 2, 3.**

அந்த மகா பெரிய புடமிடுகிறவர் எப்படி அந்த விலையேறப்பெற்ற உங்களுடைய குணத்தின் உலோகம் அவருடைய சாயலைப் பிரதிபலிக்கச் செய்கிறதென்பதைக் காணக் கவனித்துக் கொண்டிருக்கிறார். அல்லது சாதாரணப் பாஷையில் சொல்ல வேண்டுமானால், தற்காலத்தில் அனுகூலங்கள் அல்லது உலகப்பிரகாரமான கொள்கைகள் அல்லது தனது சொந்த சிநேகம் அல்லது உலக ஆசைகள் அதாவது, புருஷன் பேரிலோ, அல்லது மனைவி பேரிலோ அல்லது பிள்ளைகள் பேரிலோ உள்ள சிநேகம் அல்லது என்ன விளைவு ஏற்பட்டாலும், சமாதானமாயிருக்க வேண்டுமென்று ஆசை, ஆகிய இவைகளின் எந்த செல்வாக்குகள் எல்லா சோதனைகளிலும் நமது செயல்களைக் கட்டுப்படுத்துகின்றன என்று பார்க்க, அவர் விழிப்புள்ளவராய் இருக்கிறார். அல்லது அதற்கு எதிரிடையாக, சத்தியத்தின், நீதியின் கபடமற்ற தத்துவங்களால் கட்டுப்படுத்தப்படுகிறோமோ அல்லது நாம் ஆர்வத்தோடும் சக்தியோடும், உழைப்போ அல்லது துன்பமோ அல்லது இரண்டுமோ எதுவாயிருந்தாலும், இந்த நல்ல தத்துவங்களை நாம் காப்போமாக என்றும், இவ்வாறு முடிவு வரை அதாவது மரணம்வரை, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவோமோ என்று பார்க்கவும், அவர் கவனித்துக் கொண்டிருக்கிறார். **- Z ’96, 45 (R 1943).**

முதலாம் வருகையிலும் இரண்டாம் வருகையிலும் நம்முடைய கர்த்தர் வெளிப்பட்ட இரண்டு சமயங்களும் தேவனுடைய ஜனங்களுக்கு பெரிய சோதனைக் காலங்களாக இருந்திருக்கின்றன. அவர் வந்திருந்த இந்த இரு காலங்களும், ஒவ்வொரு மாம்சப்பிரகாரமான, ஆவியின் பிரகாரமான இஸ்ரவேலருடைய இருதயத்தின் மனப்பாங்கை முடிவாகச் சோதித்திருக்கின்றன. அவர்களுடைய இருதயத்தின் நிலைமை வெளிப்படுத்தப்படுவதற்காக மிகவும் கடுமையான சோதனைகள் இந்தக் காலங்களில் அவர்கள் மேல் வந்திருக்கின்றன. இந்தச் சோதனைகள் எல்லாம் நம்முடைய கர்த்தருடைய மேற்பார்வையில் இருந்திருக்கின்றன. பரோசியா காலத்தில் ஒருவர் ஒரு புதுச்சிருஷ்டியாகவோ, புதுச்சிருஷ்டி அல்லாதவராகவோ வெளிப்படுத்தப்பட்டதே பெரிய கேள்வியாயிருந்தது. எபிப்பனிக் காலத்தில் ஒருவர் சிறுமந்தை அங்கமா அல்லது திரள் கூட்டத்தின் அங்கமா என்று வெளிப்படுத்தப்படுகிறதே ஒரு பெரிய கேள்வியாக இருந்திருக்கிறது. இந்த இரண்டு சமயங்களிலும் குணங்களும், போதனைகளும் சோதிக்கப்பட்டிருக்கின்றன. **-P ’26, 76.**

**ஒத்து வாக்கியங்கள்** :- ஆதி 22:1; உபா 8:2,5; யோபு 1:8-2:10; தானி 12:10; யாக் 1:2,3,12; 1பேது 1:6,7; எபி 12:1-14; யோவே 2:11; வெளி 6:17. **கோபுர வாசிப்பு : Z ’,16 195 (R 5916)**

**வினாக்கள்** : இந்த வசனத்தின் சம்பந்தமாக இவ்வார அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றிலிருந்து கிடைத்த பலன்கள் எவை?